**அழகப்பா பல்கலைக்கழகம்**

(தேசிய தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்று மதிப்பீட்டில் A+ (CGPA:3.64) தகுதி பெற்றது)

**காரைக்குடி – 630 003**

நாள்: 15.04.2019

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக கலைப்புலம் சார்பில் டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் அவர்களின் 128வது பிறந்தநாள் விழா இன்று (15.04.2019) பல்கலைக்கழக கருத்தரங்க அறையில் கொண்டாடப்பட்டது.




அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் பேரா. நா. இராஜேந்திரன் இந்நிகழ்ச்சிக்கு தலைமையேற்று உரை நிகழ்த்தினார். அவர் தமது உரையில், டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் அவர்கள் தனது வாழ்நாளில், அதிகமான நாட்களை நூலகங்களிலேயே செலவிட்டார் எனவும், எந்த சூழ்நிலையும் அவருக்கு படிப்பின் மீது இருந்த ஆர்வத்தையும், அவர் தொடர்ந்து படிப்பதையும் தடைசெய்ய முடியவில்லை என்றும் குறிப்பிட்டார். இந்தியாவிலுள்ள கற்றறிந்த சான்றோர்களில் டாக்டர்.அம்பேத்கரும் ஒருவராவார். சிறந்த குடிமகனாக திகழ்ந்ததோடு இந்திய நாட்டின் இறையாண்மையை பேணிப் பாதுகாத்தவர் என்றும் குறிப்பிட்டார். மேலும் அவர் பேசுகையில் டாக்டர் அம்பேத்கர் சமூக சிந்தனையாளர், சிறந்த பொருளாதார மேதை, இந்திய அரசியலமைப்பு சட்டத்தை வடிவமைத்தவர் என பன்முக தன்மை கொண்டவர் எனவும் குறிப்பிட்டார். முன்னாள் பாரத பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள், டாக்டர் அம்பேத்கர் பற்றி குறிப்பிடும் பொழுது தனது அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள அமைச்சர்களில் டாக்டர் அம்பேத்கர் மிகவும் கற்றறிந்த அறிஞர் என்றும், இரத்தினமாக போற்றப்பட வேண்டியவர் என்றும் குறிப்பிட்டதை நினைவு கூர்ந்தார்.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஜெ. வின்சென்ட் காமராஜ் தமது சிறப்புரையில், டாக்டர் அம்பேத்கர் ஒரு தொலைநோக்கு பார்வை கொண்ட மாமனிதர் என்றும், சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வுரிமைகளை மீட்டெடுப்பதற்கு போராடியவர் என்றும் தெரிவித்தார். இந்திய சமுதாயத்தில் நிலவிய அவலங்களை ஒரு நோய் குறியியல் நிபுணர் போல ஆராய்ந்து அவைகளை களைய உரிய தீர்வுகளை கண்டறிந்தவர். பாலின அடிப்படையிலான சமத்துவம், சமூக சமத்துவம் மற்றும் பொருளாதார சமத்துவம் ஆகியவைகளின் மூலமே ஒரு சமத்துவ சமுதாயத்தை உருவாக்க முடியும் என்பதில் நம்பிக்கை கொண்டவர் டாக்டர் அம்பேத்கர். எதிர்காலத்தில் நடக்க கூடிய சட்டரீதியான சிக்கல்களுக்கு தன் தொலைநோக்கு பார்வை மூலம் உரிய தீர்வை கண்டறிந்தவர். இன்றைய

இளைஞர்கள் அம்பேத்கர் கண்ட கனவான சமத்துவ சமுதாயத்தை உருவாக்க தங்களை தயார்படுத்திக்கொள்ள வேண்டும். அவருடைய வாழ்க்கை இன்றைய இளைஞர்களுக்கு தளராத நம்பிக்கையையும், விடாமுயற்சியையும் ஊட்டும்வகையில் அமைந்துள்ளது என்றார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்த்துறைத் தலைவர் பேரா. எம். பாண்டி கருத்துரை வழங்கினார். கல்வியியல் புல முதன்மையர் பேரா. பி. தர்மலிங்கம், கலைப்புல முதன்மையர் பேரா. கே. ஆர். முருகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ஆங்கில மற்றும் அயல்நாட்டு மொழிகள் துறை தலைவர் (பொ) முனைவர் பி. மதன் வரவேற்புரை ஆற்றினார். வரலாற்றுத்துறைத் தலைவர் (பொ) முனைவர் ஏ.ஆர். சரவணகுமார் நன்றி கூறினார்.

பேரா.ஹா.குருமல்லேஷ் பிரபு
பதிவாளர்